# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2477 - 2026 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2026.02.20

2477ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | 2 |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 76 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 78 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026,மாச்சு மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, பெப்புருவரி மாதம் 27ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

75 - B 82765 - 403 (2026/02)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு(4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யூ.டபிள்யூ. ரி.யூ. ராஜகருணா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1983.05.30 ஆந் திகதி கம்/பிர/947 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்புப் பத்திரம் தெவலபொல கனிஹிமுல்லை, பேரலந்தவத்தையைச் சேர்ந்த ஹரமானிஸ் ஜயசேக்கர லியனாரச்சி என்பவருக்கு வழங்கப்பட்டு, கம்பஹா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மீக/மினு/ 01/ 249 என்ற இலக்கத்தின் கீழ் 1987.11.29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள, பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்டரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக்காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்புப் பத்திரத்தை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2026.03.13 ஆந் திகதி முன் எழுத்து மூலமாக அறியத்தரவும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா நிர்வாக மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் தாசியபத்துவ, 106/107 தெவலபொல கிராம அலுவலர் பிரிவில் கனிஹிமுல்லை எனும் ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கம்.453 என்ற இலக்கத்தைக் கொண்ட காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில் இல. 48 காணித்துண்டு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 0.101 ஹெக்டயார் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள பேரலந்தவத்தை என்ற அரசாங்கக் காணி:

வடக்கு : காணித்துண்டு இல. 47;
கிழக்கு : பிரவேச வழி;
தெற்கு : காணித்துண்டு இல. 49;
மேற்கு : பேரலந்தவத்தை.

யூ.டபிள்யூ. ரி.யூ.ராஜகருணா,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மினுவங்கொடை,
2025, நவெம்பர் 17.

02-340/1

---

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு(4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அன்பளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் யூ.டபிள்யூ. ரி.யூ. ராஜகருணா ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 1987.02.10 ஆந் திகதி கம்/பிர/9301 என்ற இலக்கத்தைக் கொண்ட அன்பளிப்புப் பத்திரம் பத்தடுவன, மினுவங்கொடை என்ற இடத்தைச் சேர்ந்த விஜேரத்ன ஆரச்சிலாகே ஜயசேன என்பவருக்கு வழங்கப்பட்டு. நீர்கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மீக/மினு/ 354 என்ற இலக்கத்தின் கீழ் 1991.03.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள, பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு சட்டரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை அல்லது இருந்தும் அவர் உரிமை கோர விரும்பவில்லை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இக்காணிக்கு சட்ட ரீதியான பின் உரித்தாளி ஒருவர் இல்லை எனக் கருதி மேற்படி அன்பளிப்புப் பத்திரத்தை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்

104ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2026.03.13 ஆந் திகதி முன் எழுத்து மூலமாக அறியத் தரவும்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா நிர்வாக மாவட்டம், மினுவங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் தாசியபத்துவ, 118, பத்தடுவன கிராம அலுவலர் பிரிவில் பத்தடுவன எனும் ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல. மு.பி.கம்.538 என்ற காணிப் பிரித்தெடுப்பு களப்பத்திரத்தில் இலக்கம் 17 ஆம் காணித்துண்டு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள 0.1084 ஹெக்டயார் பரப்பளவுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள மஹஹேன என்ற அரசாங்கக் காணி:

வடக்கு : பிரவேச வழி;
கிழக்கு : காணித்துண்டு இல. 11 மற்றும் 16;
தெற்கு : பிரவேச வழி;
மேற்கு : பிரவேச வழி.

யூ.டபிள்யூ. ரி.யூ.ராஜகருணா,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மினுவங்கொடை,
2025, திசெம்பர் 19.

02-340/2

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணம், காலி மாவட்டத்தின் யக்கலமுல்ல பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் விஸ்மன் ஆச்சாரிகே வீணா திலேஷ் பர்ல் ரசாஞ்சனீ ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட் பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1982.04.19 ஆந் திகதி வழங்கியுள்ள கா/அ 654- LL 14281 கொண்ட அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான தெல்லம்புரயில் வசிக்கும் வலக்கும்புர கமகே லெயிசொஹாமியிடம் கையளித்து காலி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO D 1/140 இன் கீழ் 1982.07.28 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாதமையினால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராக விரும்பாதமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டுருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகின்றேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2026.03.13 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தில் காலி நிருவாக மாவட்டத்தில் யக்கலமுல்ல பிரதேச செயலாளர் பிரிவின் தல்ப்பே பற்று வடக்கு பற்றில் தெல்லம்புர ( தற்போது நாவல) கிராம அலுவலர் பிரிவின் தெல்லம்புர ( இ.கி.வ. 637) எனும் ஊரில் அமைந்துள்ளதுமான அளவில் 01 ஏக்கர் 00றூட் 38 பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லை கொண்டதுமான அரசாங்கக் காணி, கொலுமலகந்த ( துண்டு இலக்கம் 1670).

வடக்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 57, 59 மற்றும் 1064;
கிழக்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 57 மற்றும் 1064;
தெற்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 1064;
மேற்கு : இத் திட்டத்தின் துண்டு இலக்கம் 1064.

வீ.ஏ.வீ.டீ.பீ. ரசாஞ்சனீ,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
யக்கலமுல்ல,
2027, ஒற்றோபர் 27.

03-342/1

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஜீ.பீ.ஏ. திளிணி ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதியினால் 1995.12.26 ஆம் திகதி வழங்கியுள்ள இலக்கம் 2/கா/13அ/ 33394 மற்றும் எல்.எல். 4225 கொண்ட அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான போத்திவலயில் வசிக்கும் கோரலேகம பத்திரகே ஞானவதீ யிடம் கையளித்து பலப்பிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் LDO P8/ 30 மற்றும் LDO B 27/178 இன் கீழ் 1997.02.13 மற்றும் 2009.02.05 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமான ஒரு உரிமையாளர் இல்லாமையினால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராக விரும்பாமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகின்றேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2026.03.13 ஆந் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலாளர் பிரிவில் பெந்தொட்ட வலல்லாவிட்டி கோரளையில் ( தெற்கு) 34பீ போத்திவல கிராம அலுவலர் பிரிவின் போத்திவல (இ.கி.வ. 581) எனும் ஊரில் அமைந்துள்ளதுமான ...... பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவை நாயகத்தினால் தயாரித்த இலக்கம் ............. கொண்ட வெளிக்களத்தாளில் / .... ஆல் தயாரித்த இலக்கம் ...... கொண்ட கண்டமிடல் வரைபடத்தில் ........ ஆல் தயாரித்த இலக்கம் ........ கொண்ட காணி உரித்துப் படத்தில் இலக்கம் ........ கொண்ட காணித்துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான அளவில் ஹெக்டயார் / ஏக்கர் 00, 03 றூட், 29பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லை கொண்டதுமான அரசாங்கக் காணி தென்னஹேன.

வடக்கு : பீ.எச். பேதிரிக் அவர்களின் காணி;
கிழக்கு : மத்தியதர வர்க்கம் வயல்;
தெற்கு : மத்தியதர வர்க்கக் காணி;
மேற்கு : எம்.ஜீ. பிரான்சிஸ் அவர்களின் காணி.

ஜீ.பீ.ஏ. திலினி,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
நியாகம,
2025, திசெம்பர் 28.

03-342/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77514.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: UPLC/ L/ 26/ KG/ L/ 277.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மொணராகலை மாவட்டத்தின் கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 146 A செல்லகதிர்காமம் கிராம அலுவலர் பிரவில் அமைந்துள்ள குடியிருப்பு அலுவலரால் வரையப்பட்ட UVA/MO/KTG/LND / 146-A/ LTL/ COM/506ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு இலக்கம் A மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 01 றூட் 13.4 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக திரு. பல்லெவெலகே லெஸ்லி என்பவரால் குத்தகைக்குக் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: பீ. லெஸ்லி ஆட்சியுரிமை கொண்டுள்ள காணி;
கிழக்கு: குமார ஆட்சியுரிமையைக் கொண்டுள்ள காணி;
தெற்கு: கே.ஏ.நிமல் ஆட்சியுரிமையைக் கொண்டுள்ள காணி;
மேற்கு: பாதைக்கான ஒதுக்கு.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய

நிபந்தனைகளின் கீழ் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதுகின்றது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.11.25 ஆந் திகதி முதல் 2055.11.24ஆந் திகதி வரை);

வருடாந்தக் குத்தகைத் தொகை: 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000, 000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5.000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங் களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.11.25 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை வழங்குவதற்கு முடியாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.02.10.

02- 341

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/79589.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/ PLC/ L9/ KW/ LTL/ 06.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 1178, இஹல எம்பவ கிராம அலுவலர் பிரிவில் கபலேவ கிராமத்தில் இ.கி.ப. 2202 வரைபடத்தின் துண்டு இலக்கம் 111 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 01 றூட் 02 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணித்துண்டை வர்த்தக நடவடிக்கையொன்றான கூட்டுறவு பிரதேச விற்பனை நிலையம் மற்றும் கிராமிய வங்கியை நடாத்துவதற்காக வரையறுக்கப்பட்ட குளியாப்பிட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: இ.கி.ப.2202 இன் துண்டு இலக்கம் 113 ஒதுக்கு 115 ( எம்பவ உப அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள காணி);
கிழக்கு: இ.கி.ப. 2208 எம்பவ கிராம எல்லை;
தெற்கு: இ.கி.ப. 2202 இன் துண்டு இலக்கம் 114 (பாதைக்கான ஒதுக்கு);
மேற்கு: இ.கி.ப. 2202 இன் துண்டு இலக்கம் 113 பாதைக் கான ஒதுக்கு மற்றும் கெம்பலேவ இற்கு செல்லும் பாதை.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.11.21 ஆந் திகதி முதல் 2055.11.20ஆந் திகதி வரை);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை: 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5.000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங் களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.11.21ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்கள் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றல்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ.ஏ.டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.02.10.

02- 343

---

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/79955.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NWP/ PLC/ L9/ GW/ LTL/ 13.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் கனேவத்த பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 433, தித்தவெல்ல கிராம அலுவலர் பிரிவின் தித்தவெல்ல கிராமத்தின் இ.கி.ப. 2773 வரைபடத்தின் துண்டு இலக்கம் 438 இனால் காண்பிக் கப்பட்டுள்ள 0.159 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை சங்க நடவடிக்கையொன்றான பொது வசதிகள் நிலையம் மற்றும் சங்ச நடவடிக்கைகளை நடாத்துவதற்காக தித்தவெல்ல மட்பாண்ட தொழில் நுட்பவியலாளர்களின் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: துண்டு இலக்கம் 440 மற்றும் 336;
கிழக்கு: துண்டு இலக்கம் 337 மற்றும் 340;
தெற்கு: துண்டு இலக்கம் 439;
மேற்கு: துண்டு இலக்கம் 440.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : ஐந்து (05) வருடங்கள் (2025.11.21 முதல் 2055.11.20 வரை);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை: தலைமை மதிப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம்

ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

தவணைத் தொகை: அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை பொது வசதிகள் நிலையம் மற்றும் சங்க நடவடிக்கைகளை நடாத்துதல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங் களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.11.21ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றல்கள் தவிர ஏனைய உப குத்தகை அல்லது மாற்றல்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ.ஏ.டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.02.10.

02- 344

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/54802.
காணி ஆணையாளரின் இலக்கம்:SPLC/GAL/3/3/61.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

காலி மாவட்டத்தின் காலி- கடவத் சத்தர பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 96C, கலுவெல்ல கிராம அலுவலர் பிரிவில் கலுவெல்ல கிராமத்தில் GA/ GFG/09/297 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் C ஊடாகக் காண்பிக்கப்பட்டுள்ள 0.0469 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணித் துண்டை வர்த்தக நோக்கத்திற்காக தேசிய சேமிப்பு வங்கியினால் குத்தகைக்குக் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது:

வடக்கு: போரக்கொடெல்ல, ஆ.பா.கா. 12435 இன் துண்டு இலக்கம் 3 மற்றும் 4;
கிழக்கு: டெம்ப்லர்ஸ் வீதி மற்றும் GA/ GFG /09/297 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு A ;
தெற்கு: கொழும்பு வீதி மற்றும் GA/ GFG /09/297 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு A ;
மேற்கு: போரக்கொடெல்ல வீதி வரி இலக்கம் 01 மற்றும் 20.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2023.01.17 முதல் 2053.01.16 வரை);

வருடாந்தக் குத்தகைத் தொகை: 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக் கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா(ரூ.5.000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறை வேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2023.01.17 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை உப குத்தகை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம்,
"மிஹிகத மெதுர",
இலக்கம் 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2026.02.02.

02- 352